மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் புதன்கிழமை
இடைநிலை மனு எண்.02/2025
இன்
அசல் வழக்கு எண்.09/2025
-------

ராமலட்சுமி .. மனுதாரர்/1 ம் பிரதிவாதி

/எதிர்/

1. M. மாரியம்மாள்
2. M. வேல்முருகன்
3. M. மகாலட்சுமி .. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
4. வட்டாட்சியர், சாத்தூர்,
   வட்டாட்சியர் அலுவலகம், சாத்தூர்.
5. மாவட்ட ஆட்சியர்,
   விருதுநகர் மாவட்டம், விருதுநகர் .. 4, 5 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 08.04.2026 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. கணபதிராமன், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. L. முரளி, அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, மனு, அபிடவிட்டு மற்றும் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

## உத்தரவு

இந்த மனுவானது அசல் வழக்கில் மனுதாரர்/1 ம் பிரதிவாதிக்கு எதிராக 08.08.2025 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி கட்டளை 9 விதி 7 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. அசல் வழக்கை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராகவும், 4, 5 எதிர்மனுதாரர்களுக்கெதிராகவும் விளம்புகை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளனர். ஷை அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக 08.08.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றைய தேதியில் மனுதாரர் தரப்பில் ஆஜரின்மை காரணமாகவும், மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தாலும் அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வழக்க சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மனுதாரர் கைவசம் இல்லாத காரணத்தால் தனது வழக்கறிஞரிடம் முறையாக தகவல் கொடுத்து எதிர்வழக்குரை தயார் செய்து உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்டுவிட்டது. எனவே அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. இம்மனு மீது எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித நியாயமான ஆட்சேபணைகளும் இருக்கப் போவதில்லை. இம்மனுவை அனுமதிக்காதுபோனால் அனேக கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே மனு தாக்கல்.

3. **<u>1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்–</u>**

**3.1.** இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் விஷயங்கள் தவிர மற்ற விஷயங்கள் யாவும் உண்மைக்கு புறம்பாக உள்ளதென மறுக்கப்படுகிறது. அவற்றை மனுதாரர்/1ம் பிரதிவாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அபிடவிட் மற்றும் மனு பொய்யும் புரட்டுமாக உள்ளது. மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு தாவா மனுவில் எந்தவித பரிகாரமும் கிடைக்கக்கூடியதில்லை. மனுதாரர்/1ம் பிரதிவாதி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து

செய்ய சொல்லியுள்ள காரணங்கள் போதுமானதாக இல்லை. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் இறந்துபோன மாணிக்கம் ஆசாரியின் வாரிசுகள் என்று விளம்புகை கோரி பிராது தாக்கல் செய்துள்ளனர்.

3.2. மனுதாரர்/1ம் பிரதிவாதி இறந்து போன மாணிக்கம் ஆசாரியின் 2வது மனைவி எனக் கூறி கட்சி செய்து வருகின்றார். இந்து வாரிசு சட்டப்படி முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது இரண்டாவது திருமணம் செய்தால் சட்டப்படி செல்லாது. சட்டப்படி இரண்டாவது மனைவி வாரிசாக வரமாட்டார். இந்து வாரிசு சட்டப்படி பிரிவு 8ன் படி வாதிகள் மட்டுமே முதல்நிலை வாரிசுகள் ஆகும். முதல் நிலை வாரிசுகள் இருக்கும்போது மனுதாரர்/1ம் பிரதிவாதி சட்டப்படி வாரிசாக வரமாட்டார். அதை தெரிந்தும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் வாதிகளை மிரட்டி சொத்துக்களை எழுதிவாங்கும் நோக்கில் மனுதாரர்/1ம் பிரதிவாதி மனு தாக்கல் செய்துள்ளார். இறந்துபோன மாணிக்கம் ஆசாரி எந்த காலத்திலும் மனுதாரர்/1ம் பிரதிவாதியை இரண்டாவது திருமணம் செய்தது கிடையாது.

3.3. மனுதாரர் 1ம் பிரதிவாதி மாணிக்கம் ஆசாரி இறந்த பின்பு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் வாதிகளை சொத்துக்களை எழுதி தரக்கேட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும், ஆட்கள் வைத்தும் மிரட்டி வந்துள்ளார். 4ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்றிதழ் வழங்கவிடாமல் பொய்யான தகவல் தெரிவித்து ஆட்சேபணை செய்து வந்ததால் மனுதாரர்/1ம் பிரதிவாதி தாவா வழக்கில் கட்சிக்காரராக சேர்க்கப்பட்டிருக்கின்றார். மனுதாரர்/1ம் பிரதிவாதி வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பற்றிய விவரங்கள் எதுவும் மனுவில் தெரிவிக்கவில்லை. மனுதாரர்/1ம் பிரதவாதிக்கு தாவா வழக்கில் எந்தவித முகாந்திரமும் இல்லை என்பதால் அவர் கைவசம் எந்த ஆவணமும் இல்லை.

3.4. மனுதாரர்/1ம் பிரதிவாதி 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகளிடம் சொத்துக்களை மிரட்டி எழுதி வாங்கும் நோக்கில் வழக்கு விபரம் தெரிந்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே வழக்கில் ஆஜராகாமல்

இருந்துவிட்டு வழக்கை காலம் கடத்தும் நோக்கில் தற்போது மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு தாவா வழக்கில் எந்தவித நியாயமான கட்சியும் கிடையாது. தாவா மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்பட வில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** **<u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. 08.08.2025ம் தேதியில் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால், வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மனுதாரர் கைவசம் இல்லாத காரணத்தினால் அவரது வழக்கறிஞரிடம் முறையாக தகவல் கொடுத்து எதிர்வழக்குரை தயார் செய்து உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. இம்மனுமீது எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித நியாயமான ஆட்சேபணைகளும் இருக்கப்போவதில்லை. இம்மனுவை அனுமதிக்காதுபோனால் மனுதாரருக்கு அனேக கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்பதால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரையில், மனுதாரர்/1ம் பிரதிவாதி இறந்து போன மாணிக்கம் ஆசாரியின் 2வது மனைவி எனக்கூறி கட்சி செய்து வருகின்றார். இந்துவாரிசு சட்டப்படி முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது இரண்டாவது திருமணம் செய்தால் சட்டப்படி செல்லாது. சட்டப்படி இரண்டாவது மனைவி வாரிசாக வரமாட்டார் என்றும், இறந்து போன மாணிக்கம் ஆசாரி எந்த காலத்திலும் மனுதாரர்/1ம் பிரதிவாதியை இரண்டாவது திருமணம் செய்தது கிடையாது என்றும், மனுதாரர்/1ம் பிரதிவாதி 1 முதல் 3

எதிர்மனுதாரர்கள்/வாதிகளிடம் சொத்துக்களை மிரட்டி எழுதி வாங்கும் நோக்கில் வழக்கு விபரம் தெரிந்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே வழக்கில் ஆஜராகாமல் இருந்துவிட்டு வழக்கை காலம் கடத்தும் நோக்கில் தற்போது தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** இம்மனுவின் ஆவணங்கள் மற்றும் வாதங்கள் பரிசீலித்துப் பார்க்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் கைவசம் ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் எதிர்வழக்குரை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்ற காரணம் எடுத்து வைக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுதாரருக்கு Locus Standi கிடையாது என்றும், ஆவணங்கள் போலியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றும், மனுதாரர் சட்டப்படி வாரிசாக திகழமாட்டார் என்றும் பல்வேறு காரணிகள் எடுத்து வைக்கப்பட்டது. இருதரப்பின் வாதங்களை நிரூபிக்கும் பொருட்டு மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மனுதாரரை வழக்கு விசாரணைக்கு அனுமதிப்பதே நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>7. இறுதி முடிவு</u>**

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>சாட்சி, சான்றாவணங்கள்</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.02/2025
இன்
அ.வ.எண்.09/2025
உத்தரவு
நாள்–15.04.2026.